வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
எஸ்.டி.சி.எண்.2527/22
வழக்கு சாட்சி – அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | சந்திரன் | ஜாதி |
| தந்தைபெயர் | | தொழில் |
| கிராமம் | | சமயம் |
| தாலுக்கா | | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.23

**(3 எதிரி ஆஜர். 1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வீரபாண்டி காவல்நிலையத்தில் சிறபபு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பிசிபட்டி காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது 21.6.20 அன்று 21.30 மணிக்கு பிசிபட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக நானும், தலைமை காவலர்கள் 1883 , 1510, 1974, சார்பு ஆய்வாளர் சரவணன் ஆகியோருடன் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் குற்றம் மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக பிசிபட்டி காவல்நிலையம் வழியாக புதிப்புரம் வழியாக ரோந்து செய்து கண்காணித்துக்கொண்டு வரும் போது புதிப்புரம் டாஸ்மார்க்கடை 8612 என்ற எண்ணுள்ள கடையின் பின்புறம் நின்றிருந்தவர்களை விசாரித்த போது எங்களை கண்டதும் ஓடி முயற்சித்தவர்களை பிடித்து விசாரிக்க பொன்னாங்கன் , தங்கப்பாண்டி, கணேசன் ஆகியோர்கள் 2 அட்டை பெட்டிகளுடனும், உரசாக்கு பைகளுடனும் இருந்தவர்களை அட்டைபெட்டியில் 180 எம்எல் பிடிக்கக்கூடிய அக்கார்டு பிராந்தி 96 பாட்டில்களும், கனிடே பிராந்தி 48 பாட்டில்களும், எம்ஜிஎம் பிராந்தி , கனிபிடே பிராந்தி 42 பாட்டில்களும், மெட்டோபல் பாட்டில்களும், அக்கார்டு 4 பாட்டில்களும், மொத்தம் 247 பாட்டில்களை அரசு அனுமதியின்றி 10 ரூபாய் அதிகமாக விற்பதற்காக குற்ற நோக்குடன் இருந்தவர்களை விசாரிக்கும் போது பொன்னாங்கன் தனியாக வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனடிப்படையில் அவர்கள் வைத்திருந்த பாட்டில்களை அத்தாட்சியில்கைப்பற்றியும், நிலையம் கொண்டு வந்தும் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். குற்றஎண்.1391/20 sec.4(1)(a) TNP Act and 24 TNP Act ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.